நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# விவசாயத் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகும்!

## அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்



**கோவை, ஜூன் 2:** விவசாயத்துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகும் என்று வேளாண் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 41-வது நிறுவன நாள் விழாவில் அவர் பேசியது:

கடந்த 1971 முதல் 2010 வரை இங்கு 17,284 பேர் பட்டப் படிப்பை முடித்துள்ளனர். முதுகலை பட்டப் படிப்பை 7,678 பேரும், முனைவர் மேற்படிப்பை 2,350 பேரும் முடித்துள்ளனர்.

இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் படித்து முடித்துவிட்டு ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். ஐ.எஃப்.எஸ். போன்ற சிவில் சர்வீஸ் பணிக்கு ஏராளமானோர் தேர்வாகி உள்ளனர்.

தமிழகத்தில் 56 சதவீதம் பேர் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மொத்தமுள்ள 130 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில், 51 லட்சம் விவசாய நிலம்ய. இதில் 28.63 லட்சம் ஹெக்டேர் பாசன வசதி பெறுகிறது. 22.37 லட்சம் ஹெக்டேர் மானாவாரி நிலம்.

வெள்ளப் பெருக்கு, கடும் இயற்கை சீற்றம் மற்றும் சுனாமி ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை விஞ்ஞானிகள் சிந்திக்க வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதேநேரத்தில் நாம் பருப்பு வகைகளை வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்கிறோம். பருத்தி உற்பத்தி 10 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைந்துவிட்டது. ஏன் என்று கேட்டால், ஆள் பற்றாக்குறை என்கிறார்கள்.

இந்த ஆட்சியில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க முயற்சி மேற்கொள்ளப்படும். தமிழகத்தில் 492 நூற்பாலைகள் உள்ளன. பருத்தி தேவை அதிகமாக உள்ளது. ஆனால், பருத்தி உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது. இதனால் பஞ்சாப், குஜராத், ஆந்திரம் என வெளிமாநிலங்களில் இருந்து பருத்தியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது.

பருத்தி உற்பத்தி குறைவு பிரச்னைக்குத் தீர்வு காண வேளாண் விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**முன்னோடி மாநிலமாக்க முயற்சி:** வேளாண் துறையை முன்னோடி மாநிலமாக ஆக்க முதல்வர் ஜெயலலிதா பாடுபட்டு வருகிறார். விரைவில் முன்னோடி மாநிலமாகும். அந்த வகையில், வேளாண் துறை திட்டங்கள் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்படும்.

இங்குள்ள இளம் விஞ்ஞானிகள் கிராமத்தை நோக்கிச் செல்ல வேண்டும். உணவுப் பற்றாக்குறை பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். மக்கள் தொகை அதிகமுள்ள நமது நாட்டில், உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது என்பது இயலாத காரியமாகும். மக்கள் தொகை குறைவாக உள்ள சிறிய நாடுகளுக்கு வேண்டுமானால் இது சாத்தியமாகும் என்றார்.

**சிறப்பு திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி:** விவசாயப் பொருள் உற்பத்தி அதிகரித்தால் தான், பொருளாதாரத்தில் நாம் மிக வேகமாக முன்னேற முடியும்.

தற்போது விவசாயிகள் மட்டும் கஷ்டப்படும் நிலையில் உள்ளனர். விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்க புதிய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அனைவருக்கும் சலுகைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வரும் காலத்தில் ஆறுகளை இணைக்கும் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது என்றார்.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த ஆராய்ச்சியாளர் விருது, சிறந்த ஆசிரியர், சிறந்த விரிவாக்கப் பணியாளர், சிறந்த பெண் விஞ்ஞானி விருது, சிறந்த ஆராய்ச்சிக் குழு விருது, சிறந்த கல்லூரி விருது, சிறந்த ஆராய்ச்சி மைய விருது, சிறந்த கேவிகே விருது, என்.எஸ்.எஸ். விருது என 134 பேருக்கு விருதுகளை, அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் வழங்கினர்.

வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் பி.முருகேசபூபதி, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆர்.பிரபாகரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் தா.மலரவன், ஓ.கே.சின்னராஜ், ஆர்.துரைசாமி, வி.சி.ஆறுக்குட்டி, எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, கே.தினகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 03 Jun 2011 09:21:18 AM IST

காஞ்சிபுரம், ஜூன் 2: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இச் சங்கத்தின் மாநில பொதுச் செயர் டி.ஏழுமலை வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற அதிமுக அரசுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறோம்.

2011-12-ம் ஆண்டுக்கு கரும்பு விலை தீர்மானிப்பதற்கான முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் விலை வழங்க வேண்டும். கரும்பு வெட்டுக் கூலி தொடர்ந்து உயர்ந்து வருவதால் கரும்பு வெட்டும் இயந்திரங்களை வரவழைக்க வேண்டும்.

கூட்டுறவு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும். தனியார் ஆலைகளில் எடை மோசடியை தடுக்க அரசே ஆலை வாயிலில் எடைமேடை அமைக்க வேண்டும். மதுராந்தகம் கூட்டுறவு ஆலைக்கு தேவையான கரும்பு பரப்புப் பகுதியை உருவாக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி எஸ்.வி.சர்க்கரை ஆலைக்கு வழங்கிய உத்தரமேரூர் தாலுக்கா பகுதியை மீண்டும் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கே வழங்க வேண்டும் என்றார்.

**"தீவனத்துக்கு மானியம் வழங்காவிட்டால் போராட்டம்'**

First Published : 02 Jun 2011 09:58:01 AM IST

புதுச்சேரி, ஜூன் 1: கறவை மாடுகளுக்குத் தீவன மானிய உதவியை மீண்டும் கொடுக்காவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்று புதுவை தலைமை தனியார் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் நலச்சங்கத்தினர் கூறியுள்ளனர்.

இது குறித்து இச் சங்கத்தின் தலைவர் ஆர். கிருஷ்ணன் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியது:

புதுச்சேரி கால்நடைத் துறையில் கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங்கள் ஏற்கெனவே முடங்கி போய்விட்டன. கறவை மாடுகளுக்கு 75 சதம் மானியத்தில் தீவனம் வழங்கும் திட்டம் மட்டும் தொடர்ந்து இருந்து வந்தது. அந்தத் திட்டமும் கடந்த ஒன்றரை மாதமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதை மீண்டும் அமல்படுத்தவில்லையென்றால் போராட்டம் நடத்துவோம். கறவை மாடு வைத்திருப்பவர்களுக்கு இத் திட்டம் பயனுள்ளதாக இருந்தது. இப்போது இதை

நிறுத்திவிட்டதால் கறவை மாடு வளர்ப்போருக்குப் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இப்போது கால்நடையின் துணையோடு கூட்டுறவு பால் நிறுவனமான பாண்லே நிர்வாகத்தின் கலப்பு தீவனத்தைக் கொல்லைப்புறமாகக் கொடுக்க முயற்சி நடப்பதாகத் தெரிகிறது. எங்களுக்கு எந்தக் கலப்பு தீவனமும் வேண்டாம். கோதுமை தவிடு, கடலைப் பொட்டு, எள்ளுப்புண்ணாக்கு, மணிலா புண்ணாக்கு உள்ளிட்ட நேரடியாக இயற்கை தீவனம்தான்
வேண்டும்.

இது போன்ற தீவனம் கிடைத்தால் பால் உற்பத்தியும் அதிகரிக்கும். வெளிமார்க்கெட்டில் தீவனம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதனால் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். உடன் சங்கத்தின் நிர்வாகிகள் பலரும் இருந்தனர்.

**தென்மேற்கு பருவ மழை தொடங்கியது: சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்வு**

First Published : 02 Jun 2011 11:49:01 AM IST

அம்பாசமுத்திரம், ஜூன் 1: மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது.

கடந்த பிசான பருவத்தில் வடகிழக்குப் பருவ மழை பெய்த போதிலும் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணை நிரம்பவில்லை. இதனால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகக் குடிநீர் தட்டுப்பாடு எழுந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 24 அடியாகக் குறைந்தது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு இதுபோன்ற நிலை உருவானது.
இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

இதனிடையே கேரளத்தில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கியதால் மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் இருந்து பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து வரத் தொடங்கியது.

புதன்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 371 கனஅடி நீர்வரத்து இருந்தது. இதேபோல் சேர்வலாறு அணைக்கும் நீர்வரத்து அதிகரித்ததை அடுத்து நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 24.60 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 50.03 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 60.05 அடியாகவும் இருந்தது.

இதற்கிடையே புதன்கிழமை பாபநாசம், விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி பகுதிகளில் மிதமான மழை பெய்தது. மேலும் இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழை

பெய்தது.  கடந்த சில தினங்களாக பருவக்காற்று வீசி வந்த நிலையில் மழை பெய்ததால் வெப்பம் தணிந்து காணப்பட்டது.

மழை பெய்து அணைகளுக்கு நீர்வரத்து வரத் தொடங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

குடிநீர் தேவைக்காக பாபநாசம் அணையில் இருந்து தாமிரபரணி ஆற்றில் 200 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் மதகு மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு 25 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தினமலர்

**உணவுப்பொருள் பணவீக்கம் 8.06 சதவீதமாக குறைந்தது**

ஜூன் 03,2011,01:51



புதுடில்லி:நாட்டின் உணவு பொருள் பணவீக்கம், மே 21ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 8.06 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 8.55 சதவீதமாக அதிகரித்திருந்தது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் உணவுப் பொருள் பணவீக்கம் கணக்கிடப் படுகிறது. 2010ம் ஆண்டு மே மாதம், மூன்றாவது வாரத்தில், உணவுப் பொருள்களின் விலை, மிக அதிகளவாக 21.15 சதவீதம் உயர்ந்திருந்தது. நடப்பாண்டு, மே மாதத்தின் மூன்றாவது வாரத்தில், பருப்பு, கோதுமை மற்றும் சில முக்கிய காய்கறிகளின் விலை குறைந்ததையடுத்து

உணவுப் பொருள் பணவீக்கம் சரிவடைந்துள்ளது.கணக்கீடு செய்வதற்கு எடுத்து கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை, சென்ற ஆண்டின் இதே வாரத்தை விட, 9.22 சதவீதம் குறைந்துள்ளது.இதே காலத்தில், கோதுமையின் விலையும் 0.77 சதவீத அளவிற்கு குறைந்துள்ளது. நடப்பு பயிர் பருவத்தில் (ஜூலை - ஜூன்), கோதுமை, பருப்பு வகைகளின் உற்பத்தி, முன் எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருவது தான் விலை குறைவிற்கு முக்கிய காரணம்.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், காய்கறிகளின் விலை, சென்ற ஆண்டின் இதே வாரத்தை விட, 1.06 சதவீதம் குறைந்துள்ளது. அதேபோல், உருளைக்கிழங்கின் விலையும் 2.15 சதவீத அளவிற்கு சரிவடைந்துள்ளது. எனினும் ஆண்டுக்கணக்கின் அடிப்படையில், பழங்கள் விலை 30.51 சதவீதமும், வெங்காயம் 12.32 சதவீதமும் அதிகரித்துள்ளது. புரதச்சத்து நிறைந்த பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதில், பால் விலை 7.04 சதவீதமும், மீன், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் விலை 5.50 சதவீதமும் உயர்ந்துள்ளது. உணவு தானியங்களின் விலை 4.78 சதவீதமும், அரிசி விலை 2.51 சதவீதமும் அதிகரித் திருந்தது.

**திருவள்ளூரில் மாம்பழ விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 03,2011,00:01 IST

இந்த ஆண்டு மாம்பழம் விளைச்சல் அதிகம் என்ற போதிலும், பழங்களில் சாரல் (புள்ளி, சுருக்கத்தால் பொழிவு மங்குதல்) விழுந்ததால், ஏற்றுமதி முற்றிலுமாக பாதித்தது. உள்ளூர் சந்தையின் தேவைக்கு மேல் பழங்கள் குவிந்ததால் விலையும் சரிந்தது. விளைச்சல் குறைவாக இருந்த காலங்களில், கிடைத்த வருமானத்தை விட, இந்தாண்டு குறைவான வருமானமே கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். திருவள்ளூர் மாவட்டம் ஆரம்பாக்கம் பகுதியில் விளையும் மாம்பழங்கள் உள்ளூர் சந்தையில், ஒரு டன் 10 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை விலைபோகும். புள்ளிகள் ஏதுமின்றி பொழிவுடன் காணப்படும் ஜவ்வாரி, பங்கனபள்ளி மாம்பழங்கள் தனியாக பிரிக்கப்படும். அவற்றை சென்னையை சேர்ந்த வெளிநாடு ஏற்றுமதியாளர்கள், டன் ஒன்றிற்கு 45 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து, வாங்கி செல்கின்றனர். ஆனால், இந்தாண்டு, மகசூல் அதிகம் என்ற போதிலும், சாரல் விழுந்த பழங்கள் ஏற்றுமதிக்கு தகுதியற்றது என்ற நிலையில், ஏற்றுமதியாளர்கள் ஆரம்பாக்கம் பகுதி மாம்பழத்தை வாங்க அடியோடு மறுத்து விட்டனர். உள்ளூர் சந்தையின் தேவைக்கு அதிகமாக மாம்பழம், ஆரம்பாக்கம் தோப்புகளில் குவிந்துள்ள நிலையில் பழ வியாபாரிகளும், ஏஜன்டுகளும் விலையை நிர்ணயிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இதுகுறித்து, மாம்பழ விவசாயி ஒருவர் கூறும்

போது, "பொதுவாக பூவில் இருந்து பிஞ்சு விடும்போது, அதன் மேல் படியும் மாசு விலகாமல் பழத்துடன் சேர்ந்து வளர்ந்து விடுகிறது. பிஞ்சு விடும் காலத்தில், ஒரு நாள் மழை பெய்தால் கூட படிந்த மாசுகள் அகன்றுவிடும். இந்தாண்டு குறிப்பிட்ட காலத்தில் மழை பெய்யாததால், தற்போது 95 சதவீத பழங்களில் சாரல் விழுந்து விட்டன. இதனால், அவற்றை ஏற்றுமதியாளர்கள் வாங்க மறுத்து விட்டனர்' என்றார். திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த ஆரம்பாக்கம் அருகே பூவ லை, தோக்கமூர், நாயுடுகுப்பம், கண்ணம்பாக்கம், தண்டலம் உள்ளிட்ட 15 கிராமங்களில் 1,200க்கும் மேற்பட்ட ஏக்கர் நில பரப்பில், மாம்பழ சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 35 மரங்கள் என்ற வகையில் வளர்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் முதல், ஜூலை வரை உள்ள மாம்பழ சீசனில் இங்கு ஒன்றரை டன் மாம்பழம் விளையும். மே மாத துவக்கத்தில் செந்தூரா வகையும், மாத இறுதியில் ஜவ்வாரி வகையும், ஜூன் மாதத்தில் பங்கனபள்ளி, ரூமாணி, நீலம், பங்களூரா ஆகிய வகைகளும், ஜூலை மாதத்தில் நீலம் வகை மாம்பழமும் அதிகமாக விளையும். இப்பகுதியில் விளையும் ஜவ்வாரி மற்றும் பங்கனபள்ளி வகை மாம்பழங்களின் சுவைக்கு மவுசு அதிகம். இந்த பழங்கள் அரபு நாடுகள், ஐரோப்பிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாம்பழ விளைச்சல் குறைவாக இருந்த காலங்களில் கண்ட வருமானத்தை விட, இந்தாண்டு வருமானம் குறைவு என்ற கூறும் ஆரம்பாக்கம் பகுதி மாம்பழ விவசாயிகள், இந்தாண்டை களையிழந்த சீசனாக கருதுகின்றனர்.

**மரவள்ளியில் துத்தநாக பற்றாக்குறை போக்கும் வழிமுறை: உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : ஜூன் 03,2011,00:56 IST

நாமக்கல்: "மரவள்ளியில் நுண்ணூட்ட கலவை தெளிப்பதால் துத்தநாகசத்து பற்றாக்குறை நீங்கி, செடிகளின் வளர்ச்சி நன்கு இருக்கும்' என, நாமக்கல் தோட்டக்கலை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வட்டாரத்தில், வளர்ச்சி நிலையில் உள்ள மரவள்ளியில் பல வயல்களில் இரும்பு மற்றும் துத்தநாகம் நுண்ணூட்டம் பற்றாக்குறை காணமுடிகிறது. அதனால், இலைகள் வெளுத்து இளம் மஞ்சளாகி, சிறுத்து மெலிந்து காணப்படுகிறது. தற்போது, வெப்பநிலை அதிகரித்துள்ளதால், வெப்பம் தாங்காமல் இலைகள் கருக ஆரம்பித்துவிடும். அதை தவிர்க்க, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம், பெரஸ்சல்பேட், 5 கிராம் ஜிங்க்சல்பேட் மற்றும், 5 கிராம் யூரியா வீதம் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகளின் மேல் நன்கு படியும்படி தெளிக்கவேண்டும். நுண்ணூட்ட கலவை இலைகளுடன் மேல் நன்கு படிய, 1 லிட்டர் தெளிப்பு திரவத்துக்கு, 1 லிட்டர் ஒட்டும் திரவம் வீதம் கலந்து தெளிப்பது சிறந்தது. இதுபோல், 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். நுண்ணூட்ட கலவை தெளிப்பதால் இரும்பு, துத்தநாகசத்து

பற்றாக்குறை நீங்கி செடிகளின் வளர்ச்சி நன்றாக இருக்கும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோவை மாவட்டத்தில் பருவமழை துவக்கம்:குடிநீர் தட்டுப்பாடு நீங்குமா?**

பதிவு செய்த நாள் : ஜூன் 03,2011,02:17 IST

கோவை : கோவையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சரியாக துவங்கியுள்ளதால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயத்தில் இருந்து மாவட்டம் விடுதலை பெற்றுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, கோவை மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை பொய்த்து வருகிறது. குறிப்பாக, கடந்த ஆண்டில் தென்மேற்குப் பருவமழை முற்றிலும் கை விட்டது;வடகிழக்குப் பருவமழை கை கொடுத்தது. இருப்பினும், அணைகள் எதுவும் நிரம்பாததால், கடந்த மாதம் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பருவமழை மேலும் தாமதிக்கும்பட்சத்தில், குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும் என்று எல்லோரும் அச்சமுற்றிருந்த நிலையில், பல ஆண்டுகளுக்குப் பின் இந்த ஆண்டில் மிகச்சரியாக ஜூன் முதல் தேதி தென்மேற்குப் பருவமழை துவங்கியுள்ளது. ஆகஸ்ட் இறுதி வரையிலும் பருவமழை நீடிக்க வேண்டும் என்பதே கோவை மக்களின் எதிர்பார்ப்பு. பருவமழை காரணமாக மக்களை வாட்டி வந்த வெயில், நேற்று முன் தினத்துடன் விடை பெற்றது. மழை தொடர்ந்து பெய்து வருவதால் நகரில் வெப்பநிலை குறைந்து காணப்படுகிறது. நேற்று பகல் முழுவதும் பெரியளவில் மழை இல்லாவிட்டாலும், சில்லென்ற காலநிலை நிலவியது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, சிறுவாணி அணை நீர்மட்டம் மெள்ள உயர்ந்து வருகிறது. சின்னக் கல்லாறு பகுதியில் அதிகபட்சமாக 138 மி.மீ., மழை பெய்தது. பொள்ளாச்சியில் 50 மி.மீ., மேட்டுப்பாளையத்தில் 35.1 மி.மீ., சூலூரில் 25 மி.மீ., வேளாண் பல்கலையில் 52 மி.மீ., கோவை விமான நிலையத்தில் 38.2 மி.மீ., பெரியநாயக்கன்பாளையத்தில் 21.2 மி.மீ., கோவை தெற்கு பகுதியில் 45 மி.மீ., வால்பாறையில் 65 மி.மீ., வால்பாறை பி.ஏ.பி.,பகுதியில் 84 மி.மீ., சின்கோனாவில் 100 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. நேற்று முன் தினம் இரவு பெய்த கனமழையில், தொண்டாமுத்தூர் தொகுதியில் இருட்டுப்பள்ளம் அருகே தற்காலிக பாலம் சேதம் அடைந்தது. சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை அமைச்சர் வேலுமணி நேற்று உடைந்த பாலத்தை பார்வையிட்டார். 24 மணி நேரத்துக்குள் தற்காலிகமாக மாற்றுப் பாலம் அமைத்துத்தர நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். நொய்யல் ஆற்றின் குறுக்கே 2.2 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பால கட்டுமான பணிகளை விரைந்து முடிக்கவும் உத்தரவிட்டார். நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் தங்கமுத்து, உதவி கோட்ட பொறியாளர் விஸ்வநாதன், உதவி செயற்பொறியாளர் முரளிகுமார், தெற்கு தாசில்தார் லட்சுமிகாந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மகாராஷ்டிரா மாதுளை பழங்கள் தூத்துக்குடியில் அமோக விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 03,2011,00:38 IST

தூத்துக்குடி : மகாராஷ்டிரா மாநில மாதுளம் பழங்கள் தூத்துக்குடி பகுதியில் அமோகமாக விற்பனையாகி வருகிறது.
பல்வேறு நோய்களுக்கு மருந்தாக விளங்ககூடிய மாதுளைக்கு எப்போதும் தனி மவுசு உண்டு. இந்த பழத்தின் தோலில் இருந்து விதைகள் வரை அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் அடங்கியுள்ளதால் இந்த பழத்தினை சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிட்டு வருகின்றனர். சில குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே மாதுளை பழத்தின் சீசன் என்பதால் இதன் விலை எப்போதும் சற்று அதிகமாகவே இருக்கும். தற்போது மகாராஷ்டிரா மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மாதுளை பழம் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. இதனால் ஏராளமான மாதுளை பழங்கள் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மகாராஷ்டிரா மாநில மாதுளை பழம் தற்போது அதிக அளவில் தமிழக பகுதிகளுக்கு விற்பனைக்காக லாரிகள் மூலம் சென்னை, மதுரை, கோவை, நெல்லை போன்ற முக்கிய ஊர்களுக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த பழத்தினை சில்லறை வியாபாரிகள் விலைக்கு வாங்கி ஆட்டோக்கள் மூலம் பல பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர். தூத்துக்குடியில் நேற்று சாலையோரங்களில் மகாராஷ்டிரா மாநில மாதுளை பழம் மொத்தமாக குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. கிலோ ஒன்றுக்கு 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பழத்தினை பொதுமக்கள் ஆவலுடன் வாங்கிச் சென்றனர்.

## குறுவை சாகுபடிக்கு 2,600 டன் உரம் தஞ்சாவூருக்கு ரயிலில் வருகை

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2011,23:29 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில், எதிர்பார்க்கப்பட்ட நாளை விட முன்னதாகவே வரும் 6ம் தேதி தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், விவசாய பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், உரம் பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்க்க கூட்டுறவுத்துறை சார்பில், ஆந்திராவில் இருந்து உரம் வரவழைத்து இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலம், கிருஷ்ணாபட்டினத்தில் இருந்து 2,600 மெட்ரிக் டன் இப்கோ யூரியா உரம் நேற்று தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்தது. ரயிலில் 42 வேகன்களில், 52 ஆயிரம் மூட்டைகளாக உரம் வந்து சேர்ந்தது.

அவற்றை தஞ்சை மத்திய கிடங்குக்கு கொண்டு செல்லும் பணி நடந்தது. இங்கிருந்து மாவட்ட அளவில் பரவலாக கூட்டுறவு விற்பனையகங்களுக்கு உரம் கொண்டு செல்லப்படுகிறது. தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருவாரூர் ஆகிய பகுதிகளுக்கு லாரியில் பிரித்து அனுப்பப்படுவதாக கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கூறினர். கூட்டுறவுத்துறை மண்டல அலுவலர் மணிமன்னன், துணை பதிவாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் மேற்பார்வையில் உரம் பிரித்து அனுப்பும் பணி நடந்தது.

**கத்தரிக்காய் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2011,23:51 IST

கந்தர்வக்கோட்டை: கந்தர்வக்கோட்டையில் கத்தரிக்காய் விலை கடும் வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை பகுதிகளில் உள்ள விவசாயிகள் கத்தரிக்காய் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளனர். பல விவசாயிகள் பயிர்களுக்கு கடன் வாங்கி உரம், மருந்து என செலவு செய்து மகசூல் வரும் தருவாயில் கத்தரிக்காய் ஏலத்துக்கு அதிகளவு வருவதால் கத்தரிக்காய் ஒரு கிலோ ரூபாய் இரண்டு, ரூபாய் நான்குக்கும் விற்கப்படுகிறது. இதனால் கத்தரிக்காயில் லாபம் கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுத்தும் நிலையில் விலை உள்ளதால் இப்பகுதியில் கத்தரிக்காய் பயிரிட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**மக்காச்சோளம் தேவை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2011,23:11 IST

திண்டுக்கல் : ""மக்காச்சோளம் தேவை ஆண்டிற்கு 20 சதவீதம் அதிகரித்துள்ளதால், விளைச்சலை அதிகப்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும்'', என வேளாண்மை துணை இயக்குனர் சாரநாத்பாபு தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: மக்காச்சோளம் தேவை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. சர்வதேச சந்தைகளில் விலை உயர்வு, அதிக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தேவையால், சீன நாடு அதிகளவில் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்கிறது. அமெரிக்க நாட்டில் மக்காச்சோளம் எத்தனால் உற்பத்திக்கும் பயன்படுத்துவது ஆகிய காரணங்களால் மக்காச்சோளத்தின் விலை, ஏறுமுகமாகவே இருந்து வருகிறது. மேலும் மக்காச்சோளத்தின் தேவை ஆண்டிற்கு 20 சதவீதம் அதிகரிக்கிறது. ஜூலை முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்தில் அறுவடையாகும், மக்காசோள த்திற்கு குவிண்டாலுக்கு 1200 ரூபாய் முதல் 1350 ரூபாய் வரை

விலை கிடைக்கும். ஏற்றுமதி தடை செய்யப்பட்டால் சற்று குறைய வாய்ப்புள்ளது. மக்காச்சோளப்பயிரை தாக்கும் அடிச்சாம்பல் நோயினைத்தடுக்க ஒரு கிலோ விதைக்கு 6 கிராம் மெட்டலாக்சில், ரிடோமில் உபயோகித்து விதை நேர்த்தி செய்ய வேண்டும், என்றார்.

## தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ விவசாயத்துறையில் பல்வேறு திட்டங்கள் இன்னும் ஒரு ஆண்டில் நிறைவேற்றப்படும் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேச்சு




தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக 41–வது ஆண்டுவிழாவில், வேளாண் துறையில் சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருதை பேராசிரியர் கீதாலட்சுமிக்கு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வழங்கிய போது எடுத்தபடம். அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி, கால்நடைபல்கலைக்கழக துணைவேந்தர் பிரபாகரன், முன்னாள் துணைவேந்தர் ராமசாமி, எம்.எல்.ஏ க்கள் தா.மலரவன்,சேலஞ்சர்துரை, ஓ.கே.சின்னராஜ், தாமோதரன், பனப்பட்டிதினகரன் ஆகியோர் அருகில் உள்ளனர்.

*கோவை,ஜூன்.3–*

விவசாயத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ விவசாய துறையில் பல்வேறு திட்டங்கள் இன்னும் ஒரு ஆண்டில் நிறைவேற்றப்படும் என்று கோவையில் நடந்த விழாவில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார்.

41–வது ஆண்டு விழா

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் 41–வது ஆண்டு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. விழாவுக்கு வந்தவர்களை வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் ப.சுப்பையன் வரவேற்றார்.

விழாவில் வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்து கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டு விருதுகள் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வில் வெற்றி பெறும் பெரும்பாலானவர்கள் வேளாண்மை பல்கலைக்கழகத்தில் படித்தவர்களாக தான் இருக்கிறார்கள். அமெரிக்காவை சேர்ந்த ஒரு பெண் இந்த பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார் என்று கூறினார்கள், அமெரிக்காவை எட்டிப் பார்க்கும் அளவுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் புகழ் வளர்ந்துள்ளது.

சமாளிக்க வேண்டும்

தமிழகத்தில் 56 சதவீதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 28 லட்சத்து 63 ஆயிரம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும் நிலமாகவும், 22 லட்சத்து 37 ஆயிரம் ஹெக்டேர் நிலம் மானாவாரி நிலமாகவும் உள்ளன. இவற்றில் உள்ள குறைபாடுகளை சரி செய்வது எப்படி? என்று நாம் ஆய்வு செய்ய வேண்டும். இந்தியாவில் வெப்பம், மழை, குளிர் மாறி மாறி நிலவுகிறது. மக்கள் தேவைக்கேற்ப உணவு உற்பத்தி செய்ய வேண்டும். தமிழகத்தில் நெல் உற்பத்தி அதிகமாக இருந்தால் பருப்பு விளைவது இல்லை. அதற்கு நாம் மற்ற மாநிலங்களை எதிர்நோக்கி இருக்க வேண்டியுள்ளது. தமிழகத்தில் 492 நூற்பாலைகள் உள்ளன. ஆனால் அவற்றிற்கு தேவையான பருத்தி இங்கு விளைவது இல்லை. குஜராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலிருந்து தான் பெற வேண்டியுள்ளது. எனவே விவசாயத்தில் உள்ள இது போன்ற பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

முன்னோடி மாநிலமாக திகழும்

கடந்த ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் சரியாக சென்றடையவில்லை. அது சரி செய்யப்பட வேண்டும். வேளாண்மைத் துறையில் நான் ஆய்வு மேற்கொண்ட போது இது தெரியவந்தது. வேளாண்மைத்துறை

திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் 6 ½ சதவீதம் தான் விவசாயிகளை சென்றடைவதாக கூறப்படுகிறது. இது மாற்றப்பட வேண்டும். வேளாண்மைத் துறையில் நான் ஆய்வு மேற்கொண்ட போது சில இடங்களில் ஆட்கள் பற்றாக்குறை என்றார்கள். சில இடங்களில் வாகனங்கள் பற்றாக்குறை என்றார்கள். இந்த குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து வேளாண்மைத் துறையில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக திகழும். இதற்கான திட்டங்கள் இன்னும் ஒரு ஆண்டில் நிறைவேற்றப்பட்டு விவசாயத்துறை தன்னிறைவு அடையும்.

நம் நாட்டில் உணவு பற்றாக்குறை வரக்கூடாது என்று பிரதமர் கூறியிருக்கிறார். மக்கள் தொகை அதிகமாக உள்ள நம் நாட்டில் உணவு பற்றாக்குறை வந்தால் அதனை சமாளிக்க வெளிநாடுகளிலிருந்து உணவு பொருட்களை இறக்குமதி செய்ய முடியாது. எனவே உணவு உற்பத்தியை பெருக்க வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும், அறிஞர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு கே.ஏ.செங்கோட்டையன் பேசினார்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில், தமிழக சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.பிரபாகரன், எம்.எல்.ஏ.க்கள் தா.மலரவன், ஓ.கே.சின்னராஜ், எஸ்.தாமோதரன், சேலஞ்சர் துரை, வி.சி.ஆறுகுட்டி, மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. கிட்டுசாமி, அந்தியூர் எம்.எல்.ஏ. ரமணிதரன், தே.மு.தி.க. எம்.எல்.ஏ. பனப்பட்டி தினகரன், இந்திய கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. எம். ஆறுமுகம், மற்றும் முன்னாள் துணைவேந்தர் சி.ராமசாமி, ஆகியோர் பேசினார்கள்.

பின்னர் பல்வேறு ஆராய்ச்சியில் விருது பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி.க்கள் எம்.தியாகராஜன், காளியப்பன், நா.கருப்பசாமி, வெள்ளலூர் பாலகிருஷ்ணன், சி.டிசி.பழனியப்பன், முத்துசாமி, கோவை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் கண்ணதாசன், உதவி அலுவலர் பாரதிதாசன் மறறும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில், ஆராய்ச்சி இயக்குனர் எம்.பரமாத்மா நன்றி கூறினார்.

அமைச்சர் பேட்டி

நிகழ்ச்சி முடிந்ததும் வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனிடம், ‘என்டோசல்பன் பூச்சி மருந்துக்கு தடை விதிக்கப்படுமா?, கள் இறக்க அனுமதி அளிக்கப்படுமா? தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தை வேளாண்மை துறையில் கொண்டு வருவது எப்போது? என்று நிருபர்கள் கேள்வி கேட்டனர்.

அதற்கு அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் பதில் அளித்து கூறியதாவது:–
இந்த பிரச்சினைகள் அனைத்தும் கொள்கை முடிவுகள் எடுக்கப்படக் கூடிய முக்கியமான விஷயங்கள் ஆகும். இவை அனைத்தும் முதல்–அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று அவர் தான் முடிவை அறிவிப்பார். அது மட்டுமல்லாமல் நாங்கள் ஆட்சி பொறுப்பு ஏற்று 10 நாட்கள் தான் ஆகிறது. வேளாண் துறையில் உள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து அது பற்றி வல்லுனர்களிடமும், விவசாயிகளிடமும் ஆலோசனைகளை பெற்று முதல்–அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். அதன் பின்னர் நல்ல முடிவுகளை முதல்–அமைச்சர் அறிவிப்பார்.
இவ்வாறு கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

## உணவு பொருள் பணவீக்கம் 8.06 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
பருப்பு வகைகள் கோதுமை விலை குறைந்துள்ளதால், மே 21–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவு பொருள் பணவீக்கம் 8.06 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 8.55 சதவீதமாக இருந்தது.

பருப்பு – கோதுமை

நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) பருப்பு வகைகள், கோதுமை உற்பத்தி அமோகமாக உள்ளது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால

அடிப்படையில் பருப்பு வகைகள் விலை 9.22 சதவீதமும், கோதுமை விலை 0.77 சதவீதமும் குறைந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 2.15 சதவீதம் குறைந்துள்ளதையடுத்து, காய்கறிகள் விலை ஒட்டுமொத்தத்தில் 1.06 சதவீதம் குறைந்துள்ளது.

அதேசமயம், வெங்காயம் விலை 12.32 சதவீதமும், பழங்கள் விலை 30.51 சதவீதமும் உயர்ந்துள்ளது. அரிசி விலை 2.51 சதவீதம் அதிகரித்துள்ளதையடுத்து, தானியங்கள் விலை 4.78 சதவீதம் உயர்ந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சியால், தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருகிறது. பொருள்கள் விலை உயர்வுக்கு பணப்புழக்கம் அதிகமாக இருப்பதும் ஒரு காரணமாக கூறப்படுகிறது. இதனால், ஊட்டச்சத்து அளிக்கும் பொருள்கள் விலை உயர்ந்து வருகிறது. அதாவது, பால் விலை 7.04 சதவீதமும், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 5.50 சதவீதமும் உயர்ந்துள்ளது.

பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள், சென்ற மே 15–ந் தேதி அன்று ஒரு லிட்டர் பெட்ரோல் விலையை ரூ.5 உயர்த்தின. இதனையடுத்து, கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் பணவீக்கம் 12.11 சதவீதத்திலிருந்து 12.54 சதவீதமாக உயர்ந்துள்ளது.

உணவு பொருள் பணவீக்கம் தொடர்ந்து குறைந்து வருமானால் அது மகிழ்ச்சி தரக்கூடியது என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

கச்சா எண்ணெய்

அதேசமயம், கச்சா எண்ணெய் விலை அதிகமாக இருப்பது ஒரு சவாலாக உள்ளது. பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டுள்ள நிலையில், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலையும் விரைவில் உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. டீசல் விலை உயர்த்தப்பட்டால், சரக்கு போக்குவரத்துச் செலவு அதிகரித்து, உணவு தானியங்கள் விலை உயர வாய்ப்புள்ளது.

## குன்னூர் கூட்டுறவு ஏல மையத்தில் 40 சதவீத தேயிலை தூள் தேக்கம்

குன்னூர், ஜூன்.3–

கூட்டுறவு ஏல மையத்தில் விற்பனை குறைவு காரணமாக 40 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

கூட்டுறவு தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இந்த

கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளுக்கு உறுப்பினர் களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகள் பச்சை தேயிலையை வினியோகம் செய்து வருகிறார்கள். 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உற்பத்தி செய்யப் படும் தேயிலை தூள் வாரந் தோறும் புதன்கிழமை ஏலம் விடப்படுகிறது.

இந்த ஏலம் குன்னூரில் இன்கோசர்வ் வளாகத்தில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் ஏலம் விடப்படுகிறது. கம்ப் யூட்டர் மூலம் நடைபெறும் இந்த ஏலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

40 சதவீத தூள் தேக்கம்

விற்பனை எண் 22–க்கான ஏலம் கடந்த 1–ந் தேதி நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 6 லட்சத்து 27 ஆயிரத்து 428 கிலோ தேயிலைதூள் வந்தது. இதில் 3 லட்சத்து 66 ஆயிரத்து 963 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 61 ஆயிரத்து 465 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்த கர்கள் கலந்து கொண்டனர். ஆனாலும் தேயிலை தூள் விற்பனை களை கட்டாமல் இருந்து. உள்நாட்டு வர்த்தக மும், வெளிநாட்டு வர்த்தகமும் மந்த நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.2 முதல் ரூ. 3 வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்களிடையே தேயிலை தூளை வாங்க போட்டி இல்லாததால் 40 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.42– ல் இருந்து ரூ.45 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் தூள் ரூ.55–ல் இருந்து ரூ.60 வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.44–ல் இருந்து ரூ.47 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.53–ல் இருந்து ரூ.58 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 23–க்கான ஏலம் வருகிற 8–ந் தேதி நடக்கிறது.

**மஞ்சூர் பகுதியில் விடிய, விடிய மழை: விவசாய பயிர்கள் நீரில் மூழ்கின**

*மஞ்சூர், ஜூன்.3–*

*மஞ்சூர் பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக விவசாய பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*

*நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை பெய்ய தொடங்கி உள்ளது.*

*விவசாய பயிர்கள்*

*இதனால் கடந்த சில நாட் களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. மஞ்சூர் பகுதியில் மழை பெய்கிறது.*

*தற்போது விவசாயிகள் மலைதோட்ட காய்கறிகளை பயிரிட்டுள்ளனர். எடக்காடு, பிக்கட்டி, எமரால்டு, இத்தலார், முத்தொரை பாலாடா, மீக்கேரி, தங்காடு, கல்லக்கொரை, நஞ்சநாடு உள்பட பல்வேறு இடங்களில் கேரட், பீன்ஸ், பட்டாணி உள்பட பல்வேறு காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ள னர்.*

*விவசாய பயிர்கள் மூழ்கின*

*இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் மஞ்சூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்தது. இந்த மழை விடிய, விடிய தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் வெள்ளம் போல் பெருக் கெடுத்து ஓடியது. விடிய, விடிய பெய்த மழையினால் நஞ்சநாடு, பாலாடா, கல்லக்கொரை, எமரால்டு போன்ற பகுதிகளில் உள்ள தாழ்வான விவசாய நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதன் காரணமாக விவசாய பயிர்கள் நீரில் மூழ்கின. மேலும் விவசாய பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*

*இயல்பு வாழ்க்கை பாதிப்பு*

*மழையினால் ஒரு சில இடங்களில் மின் தடையும் ஏற்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,700-2,740

**மணிலா பயறு**

80கிலோகொண்ட மூட்டை 4,050-4,100

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,700-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட டின்(வரி உள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 8,000-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,000.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,170.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,480.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,115.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 580-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.2-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| கபருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுத்தம் பருப்பு (கருப்பு (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.2-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 7,030
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 9280
3. ஜே 34 எல்.ஆர். 24 எம்.எம் (புதியது) ரூ. 12,524
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 11,389
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,935
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,684

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.2-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60-00 | காலிப்பிளவர் | ரூ. | 16-18 |
| கத்தரிக்காய் | ரூ. | 8-14 | பொறியல் தட்டை | ரூ. | 18-16 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-18 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10-9 | தேங்காய் | ரூ. | 10-14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10-11 | பட்டாணி | ரூ. | 74-00 |
| புடலை | ரூ. | 8-14 | பூண்டு | ரூ. | 90-00 |
| பீர்க்கன்காய் | ரூ. | 20-24 | கறிவேப்பிலை | ரூ. | 12-10 |
| சுரைக்காய் | ரூ. | 10-12 | அகத்தி | ரூ. | 16-00 |
| பாகற்காய் | ரூ. | 18-20 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| கொத்தவரை | ரூ. | 10-13 | குடைமிளகாய் | ரூ. | 34-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 30-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50-00 |
| பேரக்காய் | ரூ. | 18-20 | கறிபீன்ஸ் | ரூ. | 34-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12-10 | புஷ்பீன்ஸ் | ரூ. | 44-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 28-29 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 8-10 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 48-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-24 | கொய்யா1கிலோ | ரூ. | 28-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24-00 | மாதுளை1கிலோ | ரூ. | 40-80 |
| கருணைகிழங்கு | ரூ. | 28-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 30-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 12-14 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 40-00 |
| முள்ளங்கி | ரூ. | 14-15 | நெல்லிக்காய் | ரூ. | 36-40 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18-20 | ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10-12-16 | வெள்ளரி | ரூ. | 10-12-26 |
| நூல்கோல் | ரூ. | 22-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்தமல்லி | ரூ. | 24-20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36-34 |
| ட்ரினிட்ஸ் | ரூ. | 22-00 | அவரை | ரூ. | 26-28 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-00 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 12-00 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| புதினா | ரூ. | 16-00 | தக்காளி | ரூ. | 6-14 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25300 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 26,300 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,500 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 14,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10700 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 12000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9650 |
| கொப்பரை நாடன் | ரூ. 6555 |
| கொப்பரை ராசு | ரூ. 6575 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 7550 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22600 |
| ரப்பர் பால் | ரூ. 12945 |
| காப்பி | ரூ. 10400 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 1000 |
| இஞ்சி | ரூ. 1000 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.2-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,530 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 77.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 61.00 |
| கடலைஎண்ணைபள்ளம்பிராண்டு | ரூ. 1,450 | 96.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,240 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

**பட்டுக்கூடு**

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.174.00 | அதிகபட்சவிலை | ரூ.278.00 |
| சராசரி விலை | ரூ.146.00 | சராசரி விலை | ரூ.260.18 |
| குறைந்தபட்சவிலை | ரூ.120.00 | குறைந்தபட்சவிலை | ரூ.210.00 |

**பட்டு நூல் ரூ.1,554**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,968.00 | 16,984.00 | 17,000.00 |
| ஒரு கிராம் | 2,121.00 | 2,123.00 | 2125.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 55,895.00 | 60,000.00 | 60,000.00 |
| ஒரு கிராம் | 59.80 | 60.00 | 60.00 |